GML

# வணக்கம் ரோட்டரி

VANAKKAMM ROTARY - DISTRICT 2982

மாவட்டம் 2982

தமிழ் மாத இதழ்


| மலர் - 1 | இதழ் - 2 | ஆகஸ்ட் 2025 | தமிழ் மாத இதழ் | விலை : ரூ. 10/- |
|---|---|---|---|---|
| Volume - 1 | Issue - 2 | August 2025 | Tamil Monthly | Price : Rs. 10 |




Rotary

TEAM UNIQUE தனித்துவமாக தன்னலமற்ற 2025-26

# ஸ்ரீ கோகுலம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை

## இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு

**மாரடைப்புக்கான நவீன பைபாஸ் அறுவை சிகிச்சைகள்**
(Beating Heart Bypass Surgeries)



**இருதய வால்வு மாற்று அறுவை சிகிச்சைகள்**
(Valve Repair, Replacement Surgeries)



**சிக்கலான இருதய அறுவை சிகிச்சைகள்**
(Complicated Heart Surgeries, Re Do Surgeries)



**மகாதமனி சம்பந்தப்பட்ட அறுவை சிகிச்சைகள்**
(Aortic Dissection, Aneurysmal Surgeries)

**எக்மோ (ECMO) வசதிகளை கொண்ட இருதய தீவிர சிகிச்சைப் பிரிவு**

**முழு நேரமும் செயல்படும் அவசர சிகிச்சைப் பிரிவு**

**ஸ்ரீ கோகுலம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை**

202, பெங்களூர் பை-பாஸ் ரோடு, சேலம் - 636 004. Ph: 0427-2338800

# பிரதியினுள்....




11 சமூக சேவையின் அடித்தளம்



14 Star Project



17 மாவட்ட ஆளுநரின் பதவியேற்பு விழா



20 உலகம் முழுவதும் "சேலம்"



25 எனது நூலகம்



30 சங்க பதவியேற்பு விழா



35 சங்க திட்டங்கள்



38 Membership Growth

ஆசிரியர் பக்கம்

# வணக்கம் ரோட்டரி



நமது ரோட்டரி மாத இதழின் இந்தப் பதிப்பை உங்களிடம் கொண்டு சேர்க்கும் மகிழ்ச்சியும் பெருமையும் எனக்கு உரியது. இந்த இதழ் நமது சங்கங்களின் உயிருள்ள செயல்பாடுகளை மட்டுமின்றி, நம் சமூகங்களில் ரோட்டரி ஏற்படுத்தும் தாக்கத்தையும் அழகாக வெளிப்படுத்துகிறது.

ரோட்டரி என்பது வெறும் சேவை அமைப்பாக மட்டும் இல்லாமல், உலகம் முழுவதும் பரவியுள்ள ஒரு குடும்பமாகும். இதன் நோக்கம் - உலகத்தில், நமது சமூகங்களில், நம்முள் நாமே மாறும் வகையில் நிலையான மாற்றத்தை உருவாக்குவதே. அந்தச் சேவை உணர்வை இந்த இதழ் ஒவ்வொரு பக்கத்திலும் பிரதிபலிக்க முயல்கிறது.

இந்த இதழில், சங்கங்களின் பதவியேற்பு, மாவட்ட நிகழ்வுகள், மாவட்ட ஆளுநரின் பங்களிப்பு, உங்களை ஊக்கமளிக்கும் கட்டுரைகளும், நம்பிக்கையைத் தூண்டும் முயற்சிகளும் இடம்பெற்றுள்ளன. பசியாற உணவளித்த அன்னபூர்ணா தினம், குழந்தைகளுக்கு கல்வியை அளித்த நிகழ்வுகள், அவசரநிலையில் மனிதர்களுக்கு உதவி அளித்த நிகழ்ச்சிகள் - மேலும் பல **"Service Above Self"** என்ற நமது ரோட்டரி மையக்கருத்தை மீண்டும் நினைவுபடுத்துகின்றன.

இப்போதைய சூழ்நிலைகள் பல சவால்களை ஏற்படுத்தினாலும், நமது ரோட்டரி உறுதுணையாக இருந்துள்ளது. களத்தில் செயல்படும் அனைத்து சங்கங்களும், தலைமைத்துவமும், நட்புறவுகளும் இந்தச் சோதனைகளை வென்று செயல்பட்டுள்ளன. புதிய வழிகளைக் கற்றுக்கொண்டு, தொழில்நுட்பத்தை தழுவி, மேலும் பலரிடம் சேவைளை கொண்டு சென்றுள்ளோம்.

இந்த பயணத்தின் ஒரு பகுதியாக இருப்பதில் எனக்கு பெருமை. ஒரு இதழின் சக்தி அதில் சொல்லப்படும் கருத்துக்களில் உள்ளது. இந்த இதழுக்காக உங்கள் கட்டுரைகள், புகைப்படங்கள், கருத்துகள் மூலம் உதவிய அனைத்து ரோட்டேரியன்களுக்கும் என் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பல உறுப்பினர்கள், குறிப்பாக புதியவர்களும் இளைஞர்களும், தங்கள் அனுபவங்களை பகிர்வதற்காக முன்வருமாறு கேட்டுக்கொள்கிறேன். உங்கள் அனுபவங்கள் பிறருக்கு ஊக்கமாக அமையும்.

இந்த இதழ் நமது சேவையின் பிரதிபலிப்பாகவும், நமது குரலுக்கான மேடையாகவும், எதிர்கால ரோட்டேரியன்களுக்கான ஒரு அடையாளமாகவும் இருக்கட்டும். எதிர்கால திட்டங்களிலும் கூட்டாண்மைகளிலும், சிறப்பாக வழிநடத்தி, பணிவுடன் சேவை செய்து, பணிவு மிக்க நட்புடன் செயல்படுவோம்.

வறியாற்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

ரோட்டரி சேவையில்,
**Rtn. Hemanath**
**GML Editor**

# ரோட்டரி பன்னாட்டு தலைவரின் செய்தி



இந்த மாதத்தின் கருப்பொருள் உறுப்பினர் சேர்க்கை மாதமாக இருந்தாலும், நமது வளர்ச்சிக்கும் தொடர்புக்கும் இருக்கும் உறுதி, ஆண்டு முழுவதும் தொடர்கிறது. ரோட்டரியை வளர்ப்பதன் மூலம் நமது சேவை திறனும், தலைமைத்துவமும், மாற்றத்தை ஏற்படுத்தும் வலிமையும் வளர்கிறது.

உறுப்பினர் சேர்க்கை வெறும் எண்ணிக்கைகள் அல்ல - இது புதிய வாய்ப்புகள் மற்றும் உறவுகளை உருவாக்குவது. ஒவ்வொரு புதிய உறுப்பினரும் புதுமையான யோசனைகளையும், உற்சாகத்தையும் கொண்டு வருகிறார்கள்.

இன்றைய ரோட்டரி, பாரம்பரிய சங்கங்களோடு மட்டும் நிற்கவில்லை. **Satellite** சங்கங்கள், **Interact** சங்கங்கள், **Rotaract** சங்கங்கள் என பல்வேறு வகையான முயற்சிகள் மூலம், பலதரப்பட்ட புதிய உறுப்பினர்கள் நமக்குள் இணைந்துள்ளனர். தென்கொரியா, ரொமேனியா, இந்தியா மற்றும் உலகம் முழுவதும் நிகழும் வளர்ச்சியைக் காண்பது பெருமிதமாக உள்ளது.

ஒரு சங்கத்தின் உரிமை எந்த ஒரு தனி மனிதருக்கும் இல்லை - அது அடுத்த தலைமுறைக்கு வழங்கும் ஒரு அரிய பரிசு. அதைப் பராமரித்து, பிறருடன் பகிரும் பொழுது, ரோட்டரி நல்வாழ்வுக்கான சக்தியாகத் தொடர்கிறது.

நாம் அனைவரும் இதில் பங்கு வகிக்கிறோம் – நண்பர்களை அழைக்கலாம், புதிய கலந்தளிப்பு முறைகளை ஆதரிக்கலாம், பழைய உறவுகளை புதுப்பிக்கலாம், நமது ரோட்டரியின் பெருமையை பகிரலாம்.

வளர்ச்சியை முன்னுரிமையாக்குவோம் – ஆகஸ்ட் மாதத்தில் மட்டுமல்ல, ஒவ்வொரு மாதமும்.

நட்பு, புதுமை, மற்றும் ஒரே நோக்கத்துடன் ஒன்றிணைந்து, நல்வாழ்வுக்காக இணைவோம்.

நன்றியுடனும் அன்புடனும்,

**Francesco Arezzo**

President, Rotary International, 2025-26

# ரோட்டரி பன்னாட்டு இயக்குனரின் செய்தி



ரோட்டரியில் சேவை செய்வது என்பது ஒரு சாதாரண செயல் அல்ல - அது ஒரு பயணம். அந்த பயணத்தில் நாம் எடுக்கும் ஒவ்வொரு படியும், நாம் சந்திக்கும் ஒவ்வொரு உயிரும், நாம் விதைக்கும் ஒவ்வொரு நம்பிக்கையும், காலத்தால் அழியாத தடத்தை பதிக்கும்.

நமது வலிமை தனிப்பட்ட பங்களிப்புகளில் மட்டுமே இல்லை; அது ஒற்றுமையிலும் உள்ளது. ஒரு சங்கம் செய்யும் சிறிய செய்யலை , பல சங்கங்கள் இணைந்து செய்தால் பெரும் அலைபோல் பரவி, பல மடங்கு தாக்கத்தை ஏற்படுத்தும். வளங்கள், மனிதவளம், அனுபவம் – இவை அனைத்தும் ஒன்றினையும் போது, சேவையின் பரிமாணம் ஆழமாகவும், பரவலாகவும் மாறுகிறது.

இந்த மாதம், நாம் இரண்டு முக்கிய அம்சங்களில் கவனம் செலுத்த வேண்டும் – இணக்கம் மற்றும் நிலையானத்தன்மை.

- ✦ இணக்கம் என்பது, அண்டை சங்கங்களோடு மட்டுமல்ல, ரோட்டராக்ட், இன்டராக்ட், சமூக அமைப்புகள், அரசு நிறுவனங்கள் என அனைவருடனும் கைகோர்ப்பது.
- ✦ நிலையானத்தன்மை என்பது, ஒரு திட்டம் ஒருமுறை செய்து முடிப்பதைவிட, அது நீண்ட காலத்திற்கு பயன்படும் வகையில் திட்டமிடுவது.

உதாரணமாக, ஒரு குடிநீர் திட்டம் ஒருமுறை நிறைவேறினால் சில மாதங்களுக்கு பயன்படும். ஆனால் அதை பராமரிக்கும் திட்டத்தையும் சேர்த்தால், அது பத்து ஆண்டுகளுக்கும் மேல் சமூகத்திற்கு நன்மை தரும். அதேபோல், ஒரு கல்வி உதவித் திட்டம், மாணவரின் வாழ்க்கை முழுவதும் மாற்றத்தை உருவாக்கும்.

நாம் செய்வதை உலகம் அறிய வேண்டும். வெற்றி கதைகளை பகிர்வது ஒரு பெருமை மட்டுமல்ல, அது மற்றவர்களை செயல்பட தூண்டும் சக்தி. ஒரு சங்கத்தின் சாதனை, மற்ற சங்கங்களுக்கு முன்மாதிரியாக இருக்கும்.

அதே நேரத்தில், அடுத்த தலைமுறையையும் கவனிக்க வேண்டும். ரோட்டராக்ட் மற்றும் இன்டராக்ட் என்பது வெறும் துணைக் சங்கங்கள் அல்ல; அவை நாளைய தலைவர்கள் வளரக்கூடிய வளமான நிலம். அவர்களுக்கு வழிகாட்டுதல், வாய்ப்பு வழங்குதல், அனுபவம் பகிர்தல், ரோட்டரியின் எதிர்காலத்தை வலுப்படுத்தும்.

இந்த மாதம், நாம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும், சமூகத்தில் ஆழமான மாற்றம் மட்டுமல்ல நீடித்த மாற்றத்தையும் உருவாக்க வேண்டும். ஒவ்வொருவரும் **"Service Above Self"** என்ற ரோட்டரியின் ஆன்மாவை உயிர்ப்பித்து, நல்ல எண்ணங்களை அற்புதமான விளைவுகளாக மாற்றுவோம்.

மாறு..!! மாற்று..!! **Dare to Change..!! Dare to Shape..!!**

**RID AKS Er. Muruganandam M (MMM)**
**Rotary International Director 2025 - 27**

# மாவட்ட ஆளுநர் செய்தி



ரோட்டரி சங்க தலைவர்களே, செயலாளர்களே, மாவட்ட, மண்டல பொறுப்பாளர்களே, உதவி ஆளுநர்களே, சங்க உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் முதற்கண் இனிய வணக்கங்கள்.

தொடர்ந்து இரண்டாவது மாதமாக மாவட்ட ஆளுநரின் மாத இதழ் 2982இன் "வணக்கம் ரோட்டரி" வாயிலாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி.

கடந்த மாதம் அனைத்து சங்க தலைவர்களும் தங்களது பதவியேற்பு நிகழ்வுகளை தங்களது உறுப்பினர்களுடன் குடும்பத்தோடும் மிகச் சிறப்பாக நடத்தி முடித்து இருப்பீர்கள். பல்வேறு பதவி ஏற்பு நிகழ்வுகளில் என்னையும் சிறப்பு விருந்தினராக அழைத்து, சிறப்பு செய்தவர்களுக்கு நன்றி பாராட்டுகிறேன். என்னால் கலந்து கொள்ள இயலாத சங்கத் தலைவர்களுக்கு எனது வாழ்த்துக்களையும், உங்களால் நடைபெற உள்ள எதிர்வரும் திட்டங்களில் கலந்துகொண்டு சிறப்பு செய்ய ஆவலோடு இருக்கிறேன். பதவியேற்பு நிகழ்வுகளில் தாங்கள் பல்வேறு செயல் திட்டங்களை செயல்படுத்தி இருப்பீர்கள் அல்லது எதிர்வரும் நாட்களில் செயல்படுத்தக்கூடிய திட்டங்களுக்கு வழி வகுத்துக் கொண்டிருப்பீர்கள். அதற்கு நமது மாவட்டத்தின் சார்பாக வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த ஒரு நிகழ்விற்கும், மாவட்டத்தின் ஒத்துழைப்பு தேவை என்றால், மாவட்ட நிர்வாக குழுவினையோ அல்லது என்னையோ அணுகுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நண்பர்களே இந்த மாதம் ஆகஸ்ட் மாதம் என்பது உங்கள் அனைவருக்கும் தெரிந்த ஒன்று. இது புதிய உறுப்பினர்கள் சேர்க்கைக்கும், புதிய சங்கத்தை உருவாக்குவதற்குமான ரோட்டரி மாதம். பல்வேறு நிகழ்வுகளில், ஏற்கனவே புதிய உறுப்பினர்களை அறிமுகம் செய்திருப்பீர்கள். அப்படி அறிமுகம் செய்யப்பட்ட உறுப்பினர்களை, தாங்கள் உடனடியாக **Rotary.org** வலைதல பக்கத்தில் பதிவேற்றம் செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எதிர்வரும் 17ஆம் தேதி, நமது மாவட்டத்தினுடைய **Membership Seminar** "சிற்பி" சேலம் தொங்கு பூங்கா மண்டபத்தில் நடைபெற இருக்கிறது. அதில் புதிய சங்கங்களை தோற்றுவித்தவர்களுக்கும், புதிய உறுப்பினர்களை அறிமுகம் செய்தவர்களுக்கும், நமது மாவட்டத்தினுடைய **Membership Chairman Dr.** ராஜேஷ் அவர்களின் வாயிலாக, சிறப்பு விருந்தினர் **Rotary Coordinator Rtn.** குமணன் அவர்களால் சிறப்பு செய்து கவுரவிக்கப்பட உள்ளார்கள்.

எந்த சங்கங்கள் புதிய சங்கங்களை தோற்றுவிக்கிறார்களோ, அந்த சங்கத்தின் தலைவர் அல்லது **Advisor**-க்கு **PHF** என்ற அங்கீகாரம் வழங்கப்பட உள்ளது என்பதனை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்வரும் நாட்களில் சிறப்பான பணிகளை, ஏற்கனவே நீங்கள் திட்டமிட்ட இலக்குகளை, அனைத்து உறுப்பினர்களோடும் இணைந்து அடைவீர்கள் என்றும், மாவட்டத்தின் வாயிலாக அனைத்து ஒத்துழைப்பையும் வழங்குவோம் என்றும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். புதிய உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளுங்கள் அவர்களை அரவணைத்து செல்வதன் மூலமாக புதிய சிந்தனைகளை, புதிய செயல்களை புதிய கோணத்தில் அணுகவும், செயல்படுத்தவும் முடியும் என்பதில் எந்த ஒரு ஐயப்பாடும் இல்லை எனவே புதிய உறுப்பினர்களை இணைத்திடுங்கள். அவர்களின் மூலமாகவும், ஏற்கனவே உள்ள உறுப்பினர்களோடு இணைத்து, பல்வேறு செயல் திட்டங்களை புதிய கோணத்தில் நமது **Team UNIQUEz**-ன் கோட்பாடுகளான தன்னலமற்ற சேவைகளை, தனிதன்மையோடு செயல்படுத்துமாறு தங்களை அன்போடு கேட்டுக் கொண்டு, அனைவருக்கும் வாழ்த்துக்களை பாராட்டி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

உங்கள் ரோட்டரி மாவட்ட ஆளுநர்
**Rtn. Er. P. சிவசுந்தரம்**

# District Learning Facilitator's Message



அனைவருக்கும் வணக்கம்

**2025–26** ஆண்டிற்கான நமது **RI District 2982** ஆளுநராக பதவியேற்றுள்ள **Rtn. Er. P.** சிவசுந்தரம் அவர்களுக்கு எனது இதயம் கனிந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டிற்கான **District Learning Facilitator** பொறுப்பை எனக்கு வழங்கி, உதவி ஆளுநர்களை மேம்படுத்தும் நோக்கில் பாசறை – 1, 2, 3 பயிலரங்கங்களை சிறப்பாக நடத்துவதற்கான வாய்ப்பையும், தொடர்ந்து வழங்கிய ஆதரவுக்கும் மாவட்ட ஆளுநருக்கும், **District Secretariat Team** உறுப்பினர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

**PELS & SELS** - பாடசாலை & குருகுலம் பயிலரங்கத்தை சங்கத் தலைவர்கள் மற்றும் செயலாளர்களுக்காக சிறப்பாக நடத்தி, தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்த **RC Namakkal Poultry Town** சங்கத்திற்கும், **Event Chairman Rtn.** சுரேஷ்குமார் அவர்களுக்கும் எனது பாராட்டுகளும், வாழ்த்துகளும்.

மேலும், **"District Officers Learning Seminar -** சக்கரவியூகம்" நிகழ்வை வெற்றிகரமாக நடத்திய **Event Chairman Rtn.** இராமநாதன் மற்றும் **RC Namakkal Transport City** சங்கத்திற்கும்,

**"District Team Assembly & Grants Seminar -** அரசவை" நிகழ்வை சிறப்பாக நடத்திய **Event Chairman Rtn.Ranjana Patel** மற்றும் **RC Hosur Angels** சங்கத்திற்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளும் வாழ்த்துகளும்.

"வணக்கம் ரோட்டரி" என்கிற நமது மாவட்ட **GML** இதழை ஒவ்வொரு உறுப்பினருக்கும் பயனுள்ளதாக கொண்டு செல்லும் **District Publication Team-**க்கும், இதழின் ஆசிரியர் **Rtn.** ஹேமந்த் அவர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

மிக வலிமையான பொறுப்பாளர்கள், தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களைக் கொண்டுள்ள இந்த ஆண்டில் நிச்சயமாக நமது மாவட்டம் இமாலய சாதனைகளைப் புரியும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

நாமக்கல் ஆஞ்சநேயரின் ஆசிகளுடன் மாவட்ட ஆளுநர் **Rtn. Er. P.** சிவசுந்தரம் அவர்களின் இலக்குகள் நிறைவேற வேண்டுகிறேன்.

என்றும் ரோட்டரி சேவையில்,

**Rtn. PDG. P. சரவணன்**

**District Learning Facilitator**

# History of RI Magazine

## “ரோட்டேரி இதழ் ஒருபார்வை”




ரோட்டேரி இதழ் ஒரு சிறிய 12 பக்க மாத வெளியீடாக தொடங்கியது இன்று 500,000 க்கும் மேற்பட்ட வாசகர்களுடன் நன்கு அறியப்பட்ட பத்திரிகையாக வளர்ந்துள்ளது. இது பல உள்ளூர் ரோட்டரி பத்திரிகைகளுக்கு மிகப்பெரும் உத்வேகம் அளித்து வருகிறது . இதன் முதல் இதழ் ஜனவரி 1911 இல் வெளிவந்தது, அது தி நேஷனல் ரோட்டேரியன் என்று அழைக்கப்பட்டது. அதில் ரோட்டரி சங்கங்களின் செய்திகள், புதிய சங்கங்கள் பற்றிய அறிவிப்புகள் மற்றும் ரோட்டரியின் நிறுவனர் பால் ஹாரிஸின் கட்டுரை ஆகியவை இருந்தன. ரோட்டரி சங்கங்கள் என்ன செய்கின்றன என்பதைப் பற்றி பேசிய அவர், ரோட்டரியின் தத்துவம் என்ன என்று ரோட்டேரியன்களிடம் கேட்டறிந்துகொள்ள உதவியது.

ஹாரிஸ் மற்றும் செயலாளர் செஸ்லி ஆர். பெர்ரி ஆகியோர் ரோட்டேரியன்களுக்கு சங்க நிகழ்வுகளை தெரிவிக்க இந்த பத்திரிகையை உருவாக்கினர். பெர்ரி 1928 வரை இதழின் முதல் ஆசிரியராக இருந்துவந்தார். கனடாவிலும் இங்கிலாந்திலும் சங்கங்கள் உருவாக்கப்பட்டபோது, 1912 செப்டம்பரில் இதழ் அதன் பெயரை தி ரோட்டேரி என்று மாற்றியது.

ஆரம்பத்தில், பத்திரிகை வணிக நெறிமுறைகள், குணாதிசயத்தை உருவாக்குதல் மற்றும் வளர்ந்து வரும் உறுப்பினர் போன்ற தலைப்புகளை உள்ளடக்கியிருந்தது. பல ஆண்டுகளாக, பல புகழ்பெற்ற எழுத்தாளர்களும் கலைஞர்களும் ரோட்டரி இதழுக்கு தங்கள் பங்கினை கட்டுரைகள் மூலம் அளித்தனர்.

1940 களில், வின்ஸ்டன் சர்ச்சில் மற்றும் மகாத்மா காந்தி போன்ற நன்கு அறியப்பட்ட நபர்களிடமிருந்து உலகப்போரின் விளைவுகள் குறித்து பல கட்டுரைகளை அது வெளியிட்டது. இந்த கட்டுரைகளில் சில, பின் வந்த காலங்களில் சிறு புத்தகங்களாகவும் அச்சிடப்பட்டன.

ரோட்டரி சங்கங்கள் உலகளவில் பரவியதால், உள்ளூர் ரோட்டரி (மண்டலம் / மொழிவாரியான) பத்திரிகைகள் தோன்றத் தொடங்கின. முதலாவதாக 1915 இல் கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்தில் வெளிவந்தது. இப்போது, உலகெங்கிலும் உள்ள ரோட்டேரியன்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் தி ரோட்டேரி இதழுக்கு பதிலாக உள்ளூர் ரோட்டரி பத்திரிகையைப் படிக்கிறார்கள். ரோட்டேரியன்களால் உருவாக்கப்பட்ட 30க்கும் மேற்பட்ட உள்ளூர் ரோட்டரி பத்திரிகைகளை ரோட்டரி வேர்ல்ட் இதழ் நிறுவனம் தயாரிக்கிறது, இது 130க்கும் மேற்பட்ட நாடுகளில், 20 க்கும் மேற்பட்ட மொழிகளில் விநியோகிக்கப்படுகிறது.

இந்த ரோட்டரி இதழில் சங்கங்கள் தங்களது சேவைத்திட்டங்கள், நிகழ்வுகள் மற்றும் கருத்துக்களை பகிர்வதில் இன்றளவும் ஆற்வம் காட்டுவதிலிருந்தே அதன் முக்கியத்துவத்தையும், பெருமையையும் காட்டுகிறது.

# உதவி ஆளுநராகிய நான்

## Rtn. சி. பாலகிருஷ்ணன்



சேலம் மாவட்டம், கண்ணங்குறிச்சியில் பிறந்து வளர்ந்தேன். என் பெற்றோர் திரு. சின்னக்கண்ணு மற்றும் திருமதி. சுப்புலட்சுமி அவர்கள். எளிமையும், நேர்மையும், கடின உழைப்பும் நிறைந்த இந்த குடும்பத்தில் பிறந்ததற்கும், வளர்ந்ததற்கும் நான் பெருமை கொள்கிறேன்.

**கல்வி மற்றும் ஆரம்ப வாழ்க்கை**

பள்ளிப் பருவத்திலிருந்தே எனக்கு கட்டிடங்கள், வேலைப்பாடுகள், வடிவமைப்புகள் போன்றவை மீது தனி ஆர்வம் இருந்தது. இந்த ஆர்வமே என்னை பொறியியல் துறையில் பயணிக்கத் தூண்டியது. என் பள்ளிக் கல்வியை கண்ணங்குறிச்சியில் உள்ள ஒரு அரசு பள்ளியில் முடித்தேன். பின்னர், **CSI** பாலிடெக்னிக் கல்லூரியில், கட்டிடதுறை டிப்ளமோ **(DCE)** படிப்பை முடித்தேன்.

இந்த காலப்பகுதி என் வாழ்வில் முக்கியமான கட்டமாக இருந்தது. தொழில்நுட்ப அறிவும், குழுவோடு பணிபுரியும் திறனும் எனக்கு இங்கு உருவாகியது.

**தொழில்முறை பயணம்**

படிப்பு முடித்ததும், நான் ஒரு **Site Engineer** ஆக கட்டுமான துறையில் பணியாற்றத் தொடங்கினேன். கடந்த 8 ஆண்டுகளில், பல்வேறு திட்டங்களில் பணியாற்றி நிறைய அனுபவங்கள் பெற்றேன். தற்போது நான் "முருகா பில்டர்ஸ்" கட்டுமான நிறுவராக தனியார் மற்றும் அரசு கட்டுமான பணிகளை கவனித்து வருகிறேன்.

மேலும், அரசு அங்கீகாரம் பெற்ற **"Licensed Building Surveyor"** சான்றிதழும் பெற்றுள்ளேன். இது எனது தொழில்முறை திறனுக்கு ஒரு புதிய பரிமாணத்தை சேர்த்தது.

**ரோட்டரி பயணம்**

2017 ஆம் ஆண்டு, **Rtn.** லோகநாதன் **(RC Salem Junction)** அவர்களின் ஊக்கத்தால், நான் **Rotary Club of Salem Junction** சங்கத்தில் உறுப்பினராக இணைந்தேன். அங்கிருந்து எனது சமூக சேவை பயணம் துடங்கியது.

2020-2021 ஆம் ஆண்டில், **Joint Secretary** பொறுப்பை வகித்தேன். இந்த ஆண்டில், மிக முக்கியமான திட்டமாக **Miyawaki Forest** மரக்கன்றுகள் நடும் திட்டத்தை, கண்ணங்குறிச்சி ஊராட்சி பகுதியில் வெற்றிகரமாக முன்னெடுத்தோம். இது சுற்றுச்சூழலுக்கு உறுதியான பங்களிப்பாக அமைந்தது.

அடுத்த ஆண்டு 2021-2022-இல், எனக்கு **Zone Chairman** பொறுப்பு வழங்கப்பட்டது. இந்த பொறுப்பில், பல்வேறு சங்கங்களின் இணைப்பில் பல திட்டங்கள், நிகழ்வுகள் மற்றும் பயிற்சி வகுப்புகளை வெற்றிகரமாக நடத்தினேன்.

**Paul Harris Fellow (PHF)** என்ற பெருமைமிகு அங்கீகாரமும் பெற்றுள்ளேன். இது என் சமூகப்பணிக்காக கிடைத்த மிகச் சிறந்த மரியாதையாக கருதுகிறேன்.

**தனிப்பட்ட வாழ்க்கை**

தொழிலும், சமூக சேவையும் என் வாழ்க்கையில் சமநிலையை காப்பதுபோல் கிரிக்கெட் மற்றும் பேட்மின்டன் விளையாடுவதிலும் ஆர்வம் கொண்டிருக்கிறேன்.

என் வாழ்க்கையின் பேரொளியாக இருப்பவர் என் வாழ்க்கைத்துணை திருமதி. சுப்புலட்சுமி. எப்போதும் எனக்கு உறுதுணையாக இருந்து வருகிறார். நாங்கள் பெற்ற ஒரு பேரழகான மகள் செல்வி.பா.வைஷ்ணவி, எங்களது வாழ்வின் மகிழ்ச்சி.

எனது வாழ்க்கைப் பயணத்தை திரும்பி பார்க்கும்போது, கடவுளுக்கும், பெற்றோருக்கும், சமூகத்துக்கும் நான் நன்றியுள்ளவனாக இருப்பேனெனவும் தொழில்முறையிலும், ரோட்டரி இயக்கத்திலும், சமூக சேவையிலும் தொடர்ந்து பயணித்து, இனி வரும் காலத்திலும் இந்த சமூகத்திற்கு என் நிறைவான பங்களிப்பினை அளிக்க விரும்புகிறேன்.

**Rtn. PHF. சி. பாலகிருஷ்ணன்**
Assistant Governor, Zone - 20
Rotary Club of Salem Junction

# சமூக சேவையின் அடித்தளம்



மாவட்டம் 2982-ன் **Multi Utility Hall @ Vocational Service Centre**-க்கு நிலம் தானமாக வழங்கிய நற்பணி தானதாரருக்கு மரியாதை.

ரோட்டரி இயக்கத்தின் அடிப்படை கருப்பொருள் **"Service Above Self"** என்பதை உணர்த்தும் வகையில், **Rtn. MD. K.** சிவகுமார் மற்றும் **Rtn. MD. S.** கோமதி அவர்கள் தங்களது, 1.03 ஏக்கர் நிலத்தை **"ROTARY DISTRICT 2982 WELFARE AND FOUNDATION TRUST"**-ற்கு **Rotary Convention Hall** கட்டுவதற்காக தானமாக வழங்கியுள்ளனர் .

நம் மாவட்டத்திற்கே பெருமை சேர்க்கும் இந்த தம்பதியினரை சங்ககிரியில் நடைபெற்ற பத்திர பதிவு நிகழ்வில், சங்ககிரி துணை பதிவு அலுவலர் திருமதி. கௌரி மனோஹரி, அலுவலக ஊழியர்கள், ரோட்டரி சங்ககிரி கிளையின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து **Rtn .MD. K.** சிவகுமார் மற்றும் **Rtn. MD. S.** கோமதி அவர்களுக்கு மரியாதை செலுத்தினர்.

இந்த நிலத்தில் கட்டப்படவிருக்கும் ரோட்டரி மாநாட்டு மண்டபம், சமூக நலத்திற்கான பல விழாக்கள், பயிற்சிகள், கூட்டங்கள் மற்றும் திட்டங்களுக்கு களமாக விளங்கும். ரோட்டரி உறுப்பினர்கள் மட்டுமல்லாது, மாணவர்கள், இளைஞர்கள், சமூக சேவையாளர்கள், பொது மக்கள் என அனைவருக்கும் இது பயன்படும்.

தனது பெயரைப் பெரிதாகச் சொல்லாமல், தன்னலமின்றி இந்த நிலத்தை தானமாக அளித்த தானதாரரின் செயல், ரோட்டரியின் உண்மையான மதிப்புகளை பிரதிபலிக்கிறது.

இத்தகைய உயரிய செயல், இன்று வாழும் நமக்கும், நாளை வாழவிருக்கும் தலைமுறைக்கும் ஒரு ஊக்கமாகவும் ஒப்புமையாகவும் நிறைந்து நிற்கும்.

ரோட்டரி இயக்கத்தின் சார்பில், இந்த தன்னலமற்ற சேவையை நாங்கள் மரியாதையுடன் போற்றுகிறோம்.



# குறுக்கு எழுத்துப் போட்டி




திரைப்படங்களின் பெயர்களைக் கொண்டு ஒரு சிறு புதிர் அமைத்திட ரொம்ப நாள் ஆசை. விளைவு இது. இந்தத் திரைப்படங்களில் எவற்றை எல்லாம் பார்த்திருக்கிறீர்கள் என்றும் எனக்கு பகிரலாம்.

**இடமிருந்து வலம் :**

**2.** பெண் சிசுக்களைக் காத்திட உன் சிந்தனை வேண்டும் கருப்பு அன்னையே! (6)

**4 & 10.** மாறுவேடமும் ஆள்மாறாட்டமும் செய்து ஓடிக்கொண்டிருக்கையில் அன்பு செலுத்த வாய்ப்பு ஏது? (5, 5)

**7.** அழகு மலரும் அழைப்பு மணியும் உனக்காகத்தான். அணிந்திட வா மலரே (2, 5)

**9.** இதைக் கட்ட நடுத்தரக் குடும்பம் பட்ட பாடு பாலுமகேந்திராவுக்குத் தெரியும் (2)

**12.** ராச பக்தி செய்த குழப்பத்தில் சிவாஜிக்கு நல்ல வரவேற்பு (5)

**13.** அன்றைய தினம் ஒரே திகில் (3, 2)

**மேலிருந்து கீழ் :**

**1.** உதிர்ந்த மலர்களே மகேந்திரனுக்கு மாலையாகி விட்டன (8)

**2.** டக்கான் ரக காரட் பொறியல் பிசைந்து தின்றதால் தலைக்கு மேல் ஆட்டம்தான் (9)

**5 & 6.** அண்ணனும் தம்பியும் ரொம்ப அதிசயம்தான் (4, 7)

**8.** சுதந்திரம் கிடைக்கத் திரும்பவும் தலையை விடு (4)

**11.** ஹேராயில் தரம் நடுவில் நான்கு தரம் குறைந்தபோதும் காந்தி என்ன சொல்லிவிடப் போகிறார்? (1,2)

**வலமிருந்து இடம் :**

**3.** காவேரியைத் தேடி கிருஷ்ணா கடந்து சென்ற மற்றொரு பெரிய ஆறு (4)

**கீழிருந்து மேல் :**

**14.** ஓர் இரவில் குற்றவாளி காவலாளி ஆனதைத் திரும்பவும் நினைத்துத் திகை (4)

**இதற்கு விடை இதே பதிப்பில் ஒரு பக்கத்தில் உள்ளது.**

# உதவி ஆளுநராகிய நான்...

## Rtn. Hr. K. வசுமதி

அறிவும் கருணையும் இணைந்தால் மனித வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையுடன் எனது வாழ்க்கை பயணம் முழுவதும் கற்றல், சேவை மற்றும் சிகிச்சை என்பவற்றை மையமாகக் கொண்டு அமைத்துக் கொண்டேன்.

எனது கல்வி மற்றும் தொழில்முறை பயணத்தில் நான் முதலில் MBA பட்டம் பெற்றேன். பின்னர் என் உண்மையான லட்சியமான மாற்று மருத்துவம் நோக்கி பயணத்தை தொடர்ந்தேன். MD Acupuncture , M.Sc Psychology, Varma, Sujok Therapy மற்றும் பாரம்பரிய மருத்துவம் முடித்து 15 ஆண்டுகளாக நான் மாற்று மருத்துவ முறையில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறேன். பல்வேறு வகையான நீர்த் தொற்று, தோல் நோய்கள், கழுத்து மற்றும் முதுகு வலி, மகளிர் பிரச்சனைகள், தலைவலி, பக்கவாதம் மற்றும் நீண்டகால நோய்களை நிரந்தரமாக சிகிச்சை செய்து குணப்படுத்தியுள்ளேன்.

எனது சிகிச்சைப் பணி பல சேவை மற்றும் பொது அமைப்புகளால் பாராட்டப்பட்டது. நான் பெற்ற முக்கியமான விருதுகள்; சிறந்த சிகிச்சையாளர் விருது, சிறந்த மாற்று மருத்துவ நிபுணர் விருது மற்றும் சிறந்த கிளினிக் (ATAMA அமைப்பால்) விருதுகள் எனக்கு மிகப்பெரும் ஊக்கத்தை தந்தது.

மேலும், பல பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் சமூக அமைப்புகளில் நல்வாழ்வு குறித்த விழிப்புணர்வு சொற்பொழிவுகள் அளித்துள்ளேன்.

நான் ATAMA-வின் கல்வி ஆசிரியராகவும், மண்டல ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றி, பல மாணவர்களுக்கு பயிற்றுவித்துள்ளேன்.

### ரோட்டரியுடன் என் பயணம்

என் சமூக சேவைக்கு உரிய தளமாக ரோட்டரி அமைப்பு அமைந்தது. நான் Rotary Club of Salem Wings'ன் சாசன உறுப்பினராக ஆக இணைந்தேன். பின்னர் சங்க தலைவராக பொறுப்பேற்றபோது 100% உறுப்பினர் வளர்ச்சி, சிறந்த தலைவர் விருது என சங்கத்தை புதுப்பித்து, உற்சாகமான ஒன்றாக மாற்றினேன்.

தற்போது, நான் உதவி ஆளுநராக பொறுப்பேற்றுள்ளேன். மேலும், Inner Wheel Club உறுப்பினராகவும் உள்ளேன்.

ரோட்டரி எனக்கு நட்பும், வழிகாட்டுதலும், சேவை மனப்பான்மையும் வழங்கியுள்ளது.

### எனது குடும்பம்

எனது கணவர் Rtn. S.K. கௌரி சங்கர், ஒரு நிதி ஆலோசகர் மற்றும் வருமான வரி நிபுணர். எங்கள் ஒரே மகன் ஜி. பிரணேஷ் கண்ணன், அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் உள்ள NEU (Northeastern University)-இல் கணினி அறிவியலில் M.S. படிக்கிறார்.

என் வாழ்க்கையின் நோக்கம், மருத்துவம் மூலமாகவும் ரோட்டேரியின் வாயிலாகவும் மற்றவர்களுக்கு உதவுவது, குணப்படுத்துவது மற்றும் உயர்த்துவதே ஆகும்.

தலைமை என்பது பதவிக்காக அல்ல, ஒப்படைப்பு மற்றும் கருணைக்காக என்பதே என் நம்பிக்கை.

"சேவை செய்வோம்... நம்பிக்கையை வளர்ப்போம்..."

**Rtn. Hr. K. வசுமதி**
Assistant Governor, Zone - 21
Rotary Club of Salem Wings



STAR PROJECT

# ராசிபுரம் ரோட்டரி சங்கத்தின் தொடரும் 24 ஆண்டுகள் இலவச தையல் பயிற்சி

ராசிபுரம் ரோட்டரி சங்கம் தனது சமூக சேவையின் ஒரு முக்கிய அங்கமாக ஏழைப் பெண்களுக்கு இலவச தையல் பயிற்சி வழங்கும் திட்டத்தை கடந்த 24 ஆண்டுகளாக சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்தப் பயிற்சி வகுப்பு **2000–2001** ஆம் ஆண்டு, முன்னாள் தலைவர் **Rtn. Dr. M.** ராமகிருஷ்ணன் அவர்களால் தொடங்கப்பட்டது.

தொடக்கத்தில் சிறிய எண்ணிக்கையிலேயே பயிற்சி அளிக்கப்பட்டிருந்தாலும், திட்டத்தின் முக்கியத்துவம் சமூகத்தில் நல்ல வரவேற்பை பெற்றது. இப்போது வரை மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் இந்த பயிற்சி வாயிலாக தையல் கற்றுத் தங்களுக்கே உரிய சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்கியுள்ளனர்.

இந்த பயிற்சி வகுப்பின் ஒவ்வொரு தொடரும், முன்னாள் தலைவர் **Rtn. K.K.V.** கிருஷ்ணமூர்த்தி அவர்களால் பூஜை செய்து தொடங்கி வைக்கப்படும் என்பது ஒரு நெறிமுறை மரபாக பின்பற்றுகிறோம். ஒவ்வொரு ஆண்டும் திட்டத்தின் பொறுப்பை ஒரு புதிய தலைவர் ஏற்கும் முறையும் இந்த திட்டத்தை உயிருடன் வைத்திருக்க உதவுகிறது.

தற்போது நடைபெற்று வரும் 81வது வகுப்பு, திட்டத்தின் நீடித்த வெற்றிக்கு நேரடி சான்றாகும். இந்த ஆண்டின் திட்டச் சேர்மேனாக முன்னாள் தலைவர் **Rtn.** சிட்டி @ வரதராஜன் அவர்கள் செயல்பட்டு வருகின்றார். அவரின் வழிகாட்டுதலால், இந்த ஆண்டிலிருந்து பயிற்சி பெறும் பெண்கள் தைத்த துணிகளைப் பயன்படுத்தி துணிப்பைகள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு தேவையான ஆடைகளை இலவசமாக வழங்கும் புதிய முயற்சியும் தொடங்கப்பட்டுள்ளது.

இத்தகைய திட்டங்கள், பெண்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதோடு, சமூகத்தில் ஒற்றுமை, கருணை, மற்றும் சேவை உணர்வை வளர்க்கின்றது. ரோட்டரி சங்கத்தின் இந்த முயற்சி, சமூகத்தில் நிரந்தர மாற்றங்களை உருவாக்கும் ஓர் உன்னதமான நடவடிக்கையாக பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் வழியாக, தையல் பயிற்சி என்பது வெறும் தொழில்முறை திறன் மட்டுமல்ல. அது பெண்கள் தங்களை உறுதியாக நிரூபிக்க வழிகாட்டும் ஒரு சக்தியாகவும் உள்ளது.

– ராசிபுரம் ரோட்டரி சங்கம், சமூகத்தின் நலனுக்காக தொடர்ந்து முன்னேறி வருகிறது.







## பலன் அடைந்தவர்களில் சிலர் :



திருமதி தனலட்சுமி கடந்த 23 ஆண்டுகளாக பயிற்சி ஆசிரியையாக பணியாற்றி வருகிறார். தொழில்முறை திறமையுடன், பயிற்சிக்கு வரும் பெண்களையெல்லாம் தன் குடும்ப உறுப்பினராக கருதி அன்புடன் வழிகாட்டுவது அவரின் சிறப்பு.

---

திருமதி மேகலா – பயிற்சியால் முன்னேறிய வெற்றிப் பெண் 2017-ல் பயிற்சி பெற்ற திருமதி மேகலா, இன்று தன்னுடைய தையல் கடையை வெற்றிகரமாக நடத்தி நான்கு பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வருகிறார்.




---




திருமதி ஜெயா, இன்று தனது சொந்த தையல் கடையை நடத்தி வருகிறார். அதுமட்டுமல்லாது, தற்போது பிற பெண்களுக்கு தானே தையல் பயிற்றுவிக்கிறார். மாற்றத்தின் மெருகான எடுத்துக்காட்டு.

---

திருமதி ரேகா, தற்போது தன் வீட்டிலேயே தையல் மெஷின் வைத்து துணி தைக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்.



---

Rotary

ஆளுமையின் தன்மை என்பது; உயர்த்தும் சக்தியையும், தாழ்த்தும் சக்தியையும், பழிக்கும் சக்தியையும், ஆசீர்வதிக்கும் சக்தியையும் கொண்டுள்ளது

– *Paul Harris*

# பறந்து சென்ற ஒரு வருடம் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக என் பயணம்

## "Stephanie A. Urchick"

ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக என் ஆண்டு முடிவுக்கு வந்துள்ள இவ்வேளையில், இந்த பயணம் பற்றிய எனது எண்ணங்களை பகிர விரும்புகிறேன். உண்மையாகவே, இது மிக வேகமாக பறந்து சென்ற ஒரு வருடமாக இருந்தது!

கடந்த 12 மாதங்களில், உலகம் முழுவதும் ரோட்டரியின் பிரதிநிதியாக செயல்படும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஜப்பானின் அமைதியான கோயில்கள், துருக்கியின் கலாச்சாரம் மற்றும் அயர்லாந்தின் விருந்தோம்பல் ஆகியவை என்றும் என் நினைவில் இருக்கும்.

1991ஆம் ஆண்டு, புதிய உறவுகளை உருவாக்கவே நான் ரோட்டரியில் சேர்ந்தேன். ஆனால், அதுதான் என் வாழ்க்கையின் மூன்று தசாப்தங்களுக்கு வழிகாட்டும் ஒரு முக்கிய முடிவாக மாறும் என நான் நினைக்கவில்லை. இன்று, ரோட்டரியின் வரலாற்றில் இரண்டாவது பெண் தலைவராக பணியாற்றியுள்ளேன் என்பதை பெருமையுடன் கூறுகிறேன் – பெண்களுக்கு 1989 ஆம் ஆண்டு முதல் தான் ரோட்டரியில் சேர அனுமதி வழங்கப்பட்டது.

இந்த ஆண்டு எவான்ஸ்டனில், ரோட்டரியின் தலைமையகத்திற்கு அருகில் வாழ்ந்தேன். அமைதி முயற்சிகள், உறுப்பினர் ஈடுபாடு மற்றும் மாற்றம் செய்யும் திறன் ஆகியவற்றை மையமாகக் கொண்டு நான் பணியாற்றினேன். எல்லாவற்றையும் சாதித்துவிட்டோமா? ஒரே ஆண்டில் எல்லாவற்றையும் சாதிப்பது சுலபமல்ல. ஆனால் நாம் முக்கியமான முன்னேற்றங்களை கண்டோம் என்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளது.

டொமினிகன் குடியரசில் நீர் வடிகட்டிகள் அமைத்தல், வியட்நாமில் பள்ளி கட்டுதல் – போன்ற சேவை அனுபவங்கள் என்னை மிகவும் பாதித்தன. ரோட்டரியின் மையத்தில் இருப்பது சேவை மட்டுமல்ல; அது ஒரு வாழ்க்கை நோக்கம், சொந்தங்கள் மற்றும் உலகத்தை நல்லதாக்கும் முயற்சி.

பென்சில்வேனியாவின் மெக்மார்ரி சங்கத்திற்கு திரும்பும் எனது காலத்தில், இந்த ஆண்டு எனக்கு கொடுத்த கதைகள், நட்புகள் மற்றும் அனுபவங்களை எடுத்துச் செல்கிறேன். ரோட்டரி எனக்கு ஒரு உலக குடும்பத்தையும், அர்த்தமுள்ள வாழ்க்கையையும் வழங்கியுள்ளது. அதற்காக என்றும் நன்றி கூறுகிறேன்.

நன்றி மற்றும் நம்பிக்கையுடன்,

**Stephanie A. Urchick**

தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்

**(2024–2025)**



# மாவட்ட ஆளுநரின் பதவியேற்பு விழா



நமது 2982 மாவட்டத்தின் புதிய ஆளுநர் **Rtn Er. P.** சிவசுந்தரம் அவர்களின் பதவியேற்பு மற்றும் **RC Komarapalayam** தலைவர் மற்றும் செயலாளர் பொறுப்பேற்பு நிகழ்ச்சி ஜுலை 2 ஆம் தேதி **EXCEL Conventional** ஹாலில் நடைபெற்றது.

நிகழ்வை **Event Chairman - Rtn. J.** செந்தில்குமார் அவர் வரவேற்புரையாற்றி துவக்கினார், தொடர்ந்து சிறப்பு விருந்தினர் **Rtn. PDG. A. S.** வெங்கடேஷ் , கௌரவ விருந்தினர் **Rtn. P.** தங்கமணி, **MLA .,** மற்றும் **PDG** 'கள் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வின் முற்பகுதியாக **RC Komarapalayam** பதவியேற்பு மற்றும் சாசனம் ஒப்படைப்பு முறையே நடந்தது.

நிகழ்வின் முக்கிய பகுதிக்கு நகர்ந்து நமது 2982 மாவட்டத்தின் ஆளுநராக **Rtn. Er. P.** சிவசுந்தரம் அவர்களை **Rtn. P.** தங்கமணி, **Rtn. PRID. A. S.** வெங்கடேஷ் **& Rtn. AKS. A. K.** நடேசன் அவர்கள் இணைந்து முறையே பதவிப் பிரமாணம் செய்தனர்.

பின்னர் 2982 மாவட்ட ஆளுநர் **Rtn. Er. P.** சிவசுந்தரம் அவர்கள் தனது ஏற்புரையை துவங்கினார். மாவட்ட ஆளுநர் ரோட்டரியின் கொள்கைகளை நிலைநிறுத்துவதாகவும், அலுவலகக் கடமைகளை நிறைவேற்றுவதாகவும் உறுதியளித்தார். தனது தொலைநோக்கு விளக்கக்காட்சியில் இந்த வருடத்திற்கான மாவட்டத்தின் மற்றும் ஆளுநரின் முக்கிய இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் இடம்பெற்றிருந்தன. தொடர்ந்து தனது, உதவி ஆளுநர்கள், குழுத் தலைவர்கள் மற்றும் மாவட்ட பொறுப்பாளர்கள் உட்பட அவரின் மாவட்டத் தலைமைக் குழுவை அறிமுகப்படுத்தினார்.

இந்த வருடத்திற்கான ரோட்டரி **Directory Digital** மற்றும் **GML** "வணக்கம் ரோட்டரி" என்ற பெயரில் **Digital** முறையில் அறிவிக்கப்பட்டது அப்போது பேசிய மாவட்ட ஆளுநர் இந்த "வணக்கம் ரோட்டரி" மாதந்தோறும் அனைத்து ரொட்டேரியன்களுக்கும் கொண்டு சேர்க்கப்படுமென உறுதியளித்தார்.

மாவட்டத்தின் இலக்கில் முக்கிய அம்சமான ரோட்டரி **Conventional Centre** பற்றிய தகவல்கள் **Rtn. PDG AKS A.K.** நடேசன் அவர்களால் அறிவிக்கப்பட்டன

அத்தருணத்தில் இந்த திட்டத்திற்கு நன்கொடை அளித்த மற்றும் அளிக்கவுள்ள ஒவ்வொரு நபரையும் மேடையேற்றி கௌரவிக்கப்பட்டனர்.

இதனை தொடர்ந்து **RC Salem Evergreen** சங்கத்தை சேர்ந்த **Rtn. Dr. Rajesh,** அவர்கள் **AKS** ஆக உயர உள்ளதை அறிவித்து அவர் 2,50,000 **USD**-கான காசோலையை **PRID A.S.** வெங்கடேஷ் இடம் வழங்கினார்.
















உதவி ஆளுநர்கள் மற்றும் பிற உறுப்பினர்கள் தரவுள்ள **Rotary Foundation**-கான தொகை உறுதிசெய்யப்பட்டது. படிப்படியே **Glimpse of Grants , Digital District Directory, Digital GML, IFRM 2982 - "Raagam" (International Fellowship of Rotarian Musicians)** விவரங்கள் திரையில் ஒளிபரப்பப்பட்டது . **Royal Care Hospital** உடன் **MOU** ஒப்பந்தம், **GEM Hospitals**-ன் மருத்துவ முகாம்கள், **Dharan Hospitals**-ன் மார்பக புற்றுநோய் & கர்ப்பபை புற்றுநோய்க்கான இலவச மருத்துவ பரிசோதனை ஆகியவற்றின் அறிவிப்புகள் இடம் பெற்றன.

**Rtn. C. Senthilkumar DGE** அவர்கள் கௌரவ விருந்தினர் **Rtn.** தங்கமணி, **MLA** மற்றும் முன்னாள் அமைச்சரை அறிமுகம் செய்தார், **Rtn.** தங்கமணி அவர்கள் பேசுகையில் தனது ரோட்டரி பயணத்தையும், அனுபவத்தையும் மேடையில் பகிர்ந்ததோடு ரோட்டரி என்பது ஒரு அரசாங்கத்துக்கு இணையானது என்ற புகழாரமும் நமது மாவட்ட ஆளுநரின் சிறப்பான சேவைகளுக்காக வாழ்த்துக்களும் தெரிவித்தார் .

சிறப்பு விருந்தினர் **Rtn. PRID A. S. Venkatesh** அவர்களை **Rtn. S. Loganathan, DGN** அவர்கள் அறிமுகம் செய்ய, சிறப்பு விருந்தினர் **Rtn. PRID A. S. Venkatesh** அவர்கள் மிகச்சிறப்பான தன் உரையை அவையிலுள்ள ஒவ்வொருவருக்கும் கொண்டுசேரும் வண்ணம் விளக்கமளித்தார்.

இறுதியில் **Rtn. DG. J. Karthik, RID 3000, Rtn. PDG. Dr. Palanivelu, RID 2981, Rtn. PDG. B. Elangkumaran, RID 3203, Rtn. PDG. P. Saravanan, Rtn. PDG. K. Sundharalingam,** மற்றும் **Rtn. PDG. Dharmesh R. Patel** மாவட்ட ஆளுநர் **Rtn. Er. P. Sivasundaram** அவர்களின் பாராட்டுதல்களோடு முடிந்தது.

இந்நிகழ்வை **RC Komarapalayam** மிக சிறப்பாக நடத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

# ரோட்டராக்ட் தலைவர் மற்றும் செயலாளர் பயிற்சி கருத்தரங்கு “LOPS”




ரோட்டராக்ட் தலைவர் மற்றும் செயலாளர் பயிற்சி கருத்தரங்கு, **Knowledge institute of Technology-**ல் ‘‘LOPS’’ என்ற பெயரில் நடைபெற்றது. இதில் 2025 -26 ’ல் பொறுப்பேற்கயிருக்கும் ரோட்டராக்ட் தலைவர்களை அவர்களின் பாத்திரங்களை திறம்பட நிர்வகிக்கவும் அவர்களின் சங்கங்களை வழிநடத்தவும் தேவையான திறன்களுடன் சித்தப்படுத்துவதற்கான பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. இந்த பயிற்சி பட்டறையில் 2982 மாவட்டத்தின் அணைத்து ரோட்ராக்ட் சங்கத்தின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் என்று மொத்தம் 73 பேர் பங்கு பெற்று தலைமைத்துவ மேம்பாடு, சங்க நிர்வாகம், திட்ட மேலாண்மை, தகவல் தொடர்பு மற்றும் தலைவர், செயலாளர் இருவரும் தங்கள் சங்கத்தினை மேம்படுத்த நன்கு தயாராக இருப்பதை உறுதி செய்யப்பட்டன.

இந்தப் பயிற்சி கருத்தரங்கின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :

**தலைமைத்துவ பயிற்சி :**

இந்த கருத்தரங்கில், முடிவெடுத்தல், பிரதிநிதித்துவம் மற்றும் சங்க உறுப்பினர்களை ஊக்குவித்தல் உள்ளிட்ட தலைமைத்துவ திறன்கள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

**சங்க நிர்வாகம் :**

செயலாளர்கள் திறமையான பதிவு வைத்தல், அறிக்கையிடல் மற்றும் சங்க தகவல்தொடர்புகளை நிர்வகித்தல் பற்றி அறிந்துகொண்டார்கள்.

**திட்ட மேலாண்மை :**

தாக்கத்தை ஏற்படுத்தும் சமூக திட்டங்களை எவ்வாறு திட்டமிடுவது, செயல்படுத்துவது மற்றும் மதிப்பீடு செய்வது என்பது குறித்து ரோட்ராக்ட் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் இருவருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

**தொடர்பு திறன் :**

பொதுப் பேச்சு மற்றும் தனிப்பட்ட தொடர்பு உள்ளிட்ட பயனுள்ள தொடர்புகள் பற்றி வலியுறுத்தப்பட்டன.

**ஒத்துழைப்பு மற்றும் குழுப்பணி :**

பங்கேற்பாளர்கள் மற்ற சங்க அதிகாரிகள் மற்றும் உறுப்பினர்களுடன் திறம்பட பணியாற்ற கற்றுகொடுக்கப்பட்டது.

இந்த கருத்தரங்கு 2982 மாவட்டம் வழிகாட்டுதல்படி நடத்தப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டிருந்தன. இந்த கருத்தரங்கு RC சேலம் மிட்டவுன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது.

உள்வரும் ரோட்டராக்ட் தலைவர்கள் தங்கள் சங்கங்களை வழிநடத்தவும், பரந்த ரோட்டரி சமூகத்திற்கு பங்களிக்கவும் நன்கு தயாராக இருப்பதை உறுதி செய்யப்பட்டன.



# உலகம் முழுவதும் “சேலம்”




பெயர்கள் ஒரு இடத்தின் வரலாற்றையும், கலாச்சாரத்தையும், அடையாளத்தையும் கொண்டிருக்கும். இவ்வுலகில் பல நகரங்கள் "**சேலம்**" என்ற பெயருடன் இருந்தாலும், ஒவ்வொன்றும் தனித்துவமான கதையை சொல்கிறது. "சேலம்" என்ற பெயர் எபிரேய மொழியில் "அமைதி" எனும் அர்த்தம் கொண்ட "ஷலோம் **(Shalom)**" என்ற சொல்லில் இருந்து வந்தது. அந்த அமைதியின் அர்த்தம் கொண்ட பெயர், பல நாடுகள் மற்றும் காலக்கட்டங்களில் பயணித்து இன்று உலகளவில் பரவியுள்ளது. இது அந்தந்த இடம் மற்றும் கலாச்சாரத்தினை பொறுத்து வேறுபடும்.

**சேலம், தமிழ்நாடு, இந்தியா :**

**சேலம், தமிழ்நாடு - ஒரு குறும் பார்வை**

சேலம் என்பது தென்னிந்தியாவின் முக்கிய நகரங்களில் ஒன்று. இது இந்தியாவின் முன்னணி இரும்பு மற்றும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் உற்பத்தி மையமாக விளங்குகிறது, அதனால் "தென்னிந்தியாவின் ஸ்டீல் நகரம்" என அழைக்கப்படுகிறது. நூல் மற்றும் கைத்தறி தொழில்கள் இங்கு பாரம்பரியமாக உள்ளன. மல்கோவா மாம்பழங்கள் சேலத்தின் பெருமை. கோட்டை மாரியம்மன், சுகவனேஸ்வரர் கோவில் போன்ற ஆன்மிக தலங்களும், அருகிலுள்ள ஏற்காடு மலையும் சேலத்தின் முக்கிய தனிச்சிறப்புகளாகத் திகழ்கின்றன.

சேலம் என்பது ஒரு பாரம்பரிய மற்றும் நவீனத்தன்மை இணைந்த நகரமாக தமிழ்நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**அமெரிக்காவில் உள்ள சேலம் :**

அமெரிக்காவில் மட்டும் 25-க்கு மேற்பட்ட நகரங்கள் **"Salem"** என்ற பெயரை கொண்டுள்ளன. அவற்றில் சில முக்கியமானவை :

**சேலம், ஓரிகான்**

அமெரிக்காவின் ஒரிகான் மாநில தலைநகரான சேலம், நிர்வாகம், கல்வி, மற்றும் கலாச்சார முக்கியத்துவம் கொண்ட நகரமாகும். வில்லமெட் நதியருகே அமைந்த இந்நகரம், பசுமை பூங்காக்கள், பல்கலைக்கழகங்கள், கலாச்சார நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் சிறப்புபெற்று, வாழ்வதற்கேற்ற அமைதியான சூழலை வழங்குகிறது.

**சேலம், மெசசூசெட்ஸ்**

